[1978 மார்ச் 2

திரு. செ. சதாசிவம் : தலைவரவர்களே, புதுக்கோட்டையும், திருச்சியும் ஒன்ருக இருந்த காரணத்தினுல், அதைப் பிரித்த நேரத்திலே, இந்த மார்க்கெட்டிங் கமிட்டியை புதுக்கோட்டைக் குத் தனியாக அமைக்கிற நேரத்திலே, திருச்சி மாவட்டத்திலே யிருக்கிற மார்க்கெட்டிங் கமிட்டி நல்ல முறையிலே செயல்படாத தனுல், அதையும் மாற்றியமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலே இருக்கக்கூடிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் இப்பொழுது நல்லமுறையில்தான் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சரியாகச் செயல்படவில்லையென்று சொல்கிருர். அப்படி ஏதாவது புகார்கள் வந்தால், அதைத் தயவுசெய்து அரசுக்கு அனுப்பினுல், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்).

2. தகவல் கோரல்.

சமூக நலத்துறை அமைச்சருக்குப் பதிலாக வேறு அமைச்சர் கேள்விக்கு பதிலளித்தது குறித்து.

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, இன்று சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுடைய கேள்விக்கு வேறு அமைச்சர் பதில் அளித்தாரே, அதற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் ஓர் வழக் கறிஞர்; கூட்டுப் பொறுப்பு இருப்பதாலே எந்த அமைச்சரும் பதில் சொல்லலாம். வேறு எந்த காரணமும் இல்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, நான் பல தடவை உங்களுடைய கவனத்தைக் கவர்வதற்காக கை தூக்கிக் காண்பித்தேன். தகவலைப் பெற வேண்டும் என்ற எண் ணம் எனக்கிருக்கிறது. இருந்தும் தாங்கள் எனக்கு ஓரவஞ்சனை செய்கிறீர்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வடார்க்காடு மாவட்டம் என்று வரும்போது திரு. இராமசாமியை விடமாட்டேன். தங்களை ஒட்டிய கேள்வி இல்லை என்பதால் விட்டிருப்பேன். தயவுசெய்து வேண்டுமென்றே தங்களைக் கவனிக்கவில்லை என்று கருதவேண் டாம்.